# புலமைக்கதிர் 5

புதிய பாடத்திட்டம் - 2020

**தாய்மொழி** **நேரம்:- 01.00மணி**

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக?

நாம் நம் பண்டைய விளையாட்டுக்களை முற்றிலும் மறந்து விட்டோம். அவற்றில் ஒன்று தான் கெந்தி விளையாட்டு. ஓடுபவர்களை ஒற்றைக்காலால் கெந்தி அடித்துத் தொடுவது கெந்தி விளையாட்டாகும். இது சிறுவர்களுக்கு சிறந்த உடற்பயிற்சி ஆகும். கெந்தி விளையாட்டு பிள்ளைகளின் உடலுக்குப் புத்துணர்ச்சியை அளித்து, அவர்களின் சோம்பேறித்தனத்தைக் குறைக்கிறது.

இது கால்களுக்கு இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகிறது. இழப்பில் ஈடுகட்டும் ஆற்றலைத் தருவதோடு, தன்னம்பிக்கையையும் அதிகரிக்கிறது. கெந்தி விளையாட்டிற்கு இத்தனை பேர் விளையாட வேண்டும் என வரைமுறை எதுவும் இல்லை. இதில் எத்தனை பேர் வேண்டுமானாலும் பங்குபற்றலாம்.

1) பந்தியில் கூறப்படும் விளையாட்டு எது?

..........................................................

2) இவ்விளையாட்டின் நன்மை ஒன்று தருக?

..........................................................

..........................................................

3) “விளையாட்டு” என்ற சொல்லில் உள்ள உயிர்க்குறி யாது?

..........................................................

4) “நவீன” என்பதன் எதிர்ப் பதத்தை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக?

..........................................................

5) இவ் விளையாட்டில் எத்தனை பேர் விளையாட முடியும்? ..............................

6) திடசங்கற்பம் என்பதன் ஒத்த சொல் யாது? ..........................................

**02) பின்வரும் ஒவ்வொரு சொற் கூட்டங்களுள் எந்தச் சொல் வேறுபட்டது எனக் கண்டு பிடித்து அச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. மை, பேனா, மலர், புத்தகம், பென்சில் (................................)
2. பாடகன், அம்மா, அப்பா, அக்கா, அண்ணன் (................................)
3. மயில், குருவி, மரை, குயில், காகம் (................................)
4. மரம், மான், வேர், கிளை, தண்டு (................................)
5. ஆசிரியர், அதிபர், மாணவர், பெற்றோர், நடிகன் (................................)

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

**03) பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக?**

1. உண்டி - ....................
2. துக்கம் - .......................
3. நாடு - ..........................
4. உவகை - ..............................
5. செவி - ...................................

**04) பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக?**

1. ஒளி - .........................
2. ஞாபகம் - ....................
3. சாதகம் - .....................
4. முற்பகல் - ................ ..............
5. சுத்தம் - ................................

**05) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக?**

1. பனை + வேர் = ................................
2. மா + இலை = ...........................
3. பழம் + வகை = ..............................................
4. முள் + புதர் = ..............................
5. பொன் + காசு = .................................

**06) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச் சொல்லை எழுதுக.**

1. நம்பமுடியாத கதை : ..........................................................................................
2. வீண் செலவு செய்பவன் : ......................................................................
3. ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் :.......................................................
4. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் : ..............................................................
5. தெருக்கள் கூடுமிடம் : ..........................................................................

**07) பின்வரும் வாக்கியங்களில் கோடிடப்பட்ட சொற்களுக்கான எதிர்ப்பால் சொல்லை வைத்து மீண்டும் வாக்கியத்தை எழுதுக.**

1.நான் <u>மாமா</u> வீட்டிற்குச் சென்றேன். ..................................................

2.அந்தச் <u>சிறுவன்</u> அழுகிறான். ........................................................

3.<u>அரசி</u> கோபமடைந்தாள். ....................................................

4.எனது <u>எசமான்</u> நல்லவர். ..................................................

5.இவன் எனது <u>பேரன்</u> ......................................................

08) சரியான விடையின் கீழ்க் கோடிடுக?

1.பாட்டியின் சேலைக் …………… அழகாகக் காட்சியளித்தது.( கரை / கறை )

2. புலி ………………… உண்ணியாகும்.( ஊண் / ஊன் )

3. எமது நாட்டில் ………………….காலத்தில் மழை பொழியும்.( மாரி / மாறி)

4. தேயிலை ……… நாட்டில் முதன்முதலில் பயிரிடப்பட்டது.( மழை / மலை )

5. அவன் எங்கே ………ந்து கொண்டிருக்கிறான் எனக் கேட்டான்.( ஒளி / ஒழி)

09) பின்வரும் ஒருமை வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக எழுதுக?

1. சேவல் இனிமையாகக் கூவியது.

..............................................................................................................

2. பட்டம் காற்றில் ஆடி அசைந்தது.

..............................................................................................................

3. மான் வேகமாக ஓடியது.

..............................................................................................................

4. நீர்க்காகம் நீரில் நீந்தியது

..............................................................................................................

5. பறவை வானில் பறந்தது.

..............................................................................................................

10) கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்து எழுதுக?

(அடைப்புக்குள் தரப்பட்ட சொற்களைப் பயன்படுத்துக)

1. நான் கடந்த வருடம் இந்தியாவுக்குப் (போ) ..............................................

2. என் தங்கை இப்போது வகுப்பில் (இரு) ..............................................

3. அம்மா நாளைக்குப் புத்தகம் (வாங்கு) ..............................................

4. மழை வரக் கண்டால் மயில் (ஆடு) ..............................................

5. இன்று கடும் மழை (பெய்) ..............................................

11) பின்வரும் சொற்களுக்குரிய ஆண்பால், பெண்பாற் சொற்களை எழுதுக?

1. நடிகன் - ……………………… 4. சீமான் - ………………………

2. சுந்தரன் - ……………………… 5. ……………………… - புத்திரி.

3. …………………… - மூத்தவள்.

**12) (அ) பின்வரும் பிராணிகளின் இளமைப் பெயரை எழுதுக?**

1. பசு - ........................................
2. குரங்கு - ......................................

**(ஆ) பின்வரும் பழமொழிகளைப் பூரணப்படுத்துக?**

1. ஆற்றிலே போட்டாலும் ..........................................................
2. ..............................................................தூற்றிக் கொள்.
3. காக்கைக்கும் தன் குஞ்சு ..........................................................

**13) பின்வருவனவற்றிற்கு ஒவ்வொரு உதாரணந் தருக?**

1. பொருட் பெயர் :- ..........................................................
2. இடப் பெயர் :- ..........................................................
3. காலப்பெயர் :- ..........................................................
4. சினைப் பெயர் :- ..........................................................

**14) பின்வரும் படத்தைப் பார்த்து உமது மனதில் தோன்றும் எண்ணங்களை நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இடம் பெறுதல் வேண்டும்.**



1. ..........................................................................................................
   ..........................................................................................................
2. ..........................................................................................................
   ..........................................................................................................
3. ..........................................................................................................
   ..........................................................................................................